**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : STC No.264/2017 | Date | : 02.03.2026 |
| Deposition of Witness for | : அ.சா. 7 | Taluk | : |
| Name | : பிரபாகரன் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.03.2026

(3மற்றும் 4 எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 2ம் எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். 1 மற்றும் 2ம் எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் சித்தோடு காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 30.06.2015ம் தேதி சித்தோடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நான் நிலைய அலுவலில் இருந்தபோது, TPN Ortho 8 spine மருத்துவமனையில் இருந்த கிடைக்கப்பெற்ற வரதராஜன் என்பவரின் அசால்ட் இண்டிமேசனை பெற்று அங்கு சென்று பார்க்க அங்கு சிகிச்சையில் இருந்த வரதராஜனை விசாரிக்க அவர் உறவினர்களை கலந்து ஆலோத்து புகார் கொடுப்பதாக கூறியதன்பேரில் நிலையம் வந்தேன். பின் மீண்டும் 01.07.2015ம் தேதி வரதராஜன் கொடுத்த தகவலின்பேரில் மாலை 17.00 மணிக்கு அதே மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த வரதராஜனை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண். 251/2015 சட்டப்பிரிவு 147, 294(b). 323, 506(ii) இதச பிரிவின் கீழ் இரவு 19.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து வாதியின் புகார் வாக்குமூலத்துடன் முதல் தகவல் அறிக்கையின் அசலை இணைத்து

நீதித்துறை நடுவர் எண்.,3 அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன்விசாரணைக்காக ஒரு நகலை எடுத்துக்கொண்டேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. நான் என்னுடைய புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 02.07.2015ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முத்துசாமி, சுப்பிரமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ. 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** சாட்சிகள் வரதராஜன், அன்பழகன், குண்டுமுத்து (எ) முத்துசாமி, தியாகராஜன், பாலாஜி, கலைமணி, சுப்பிரமணி, முத்துசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. சம்பவ இட விசாரணையில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும், சம்பவம் உண்மையென தெரிந்து எதிரிகள் அஞ்சலிதேவி, பிரபு, பிரகாஷ், சேகர் (எ) ஞானசேகர், அய்யாசாமி (எ) கண்ணையன், ஜோதி ஆகியோர்களை தேட அவர்கள் ஈரோடு முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்று பிணையில் சென்ற விவரம் தெரியவந்தது. 31.07.2015ம் தேதி வரதராஜனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜான்குருபாதம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றேன். எனது புலன்விசாரணையில் 01 முதல் 04 வரையுள்ள எதிரிகள் மட்டும் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது தெரியவந்ததால் மற்ற எதிரிகளான அய்யாசாமி, ஜோதி ஆகியோரை இவ்வழக்கிலிருந்து நீக்கியும், சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(i) படிசட்டபிரிவை மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்பு எனது புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக 1ம் எதிரி அஞ்சலிதேவி கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண். 250/2015 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், வந்த வழக்கிலும் நான்தான் புலன் விசாரணை அதிகாரி என்றும் சொன்னால் சரிதான். இரண்டு வழக்கு சம்பவங்களும் ஒரே நாளில், ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் நடந்ததாகத்தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவரிடம் அ.சா. 1 வரதராஜன் தன்னை மூன்று தெரிந்த நபர்கள் மற்றும் நான்கு தெரியாத நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். நான்கு நபர்கள் மீதுதான் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற மூன்று நபர்கள் குறித்து எனது விசாரணையில் தெரிந்து கொள்ள வில்லை என்றால் சரிதான்.

2. புகார் வாக்குமூலத்தில் பல இடங்களில் அடித்தல் திருத்தல் உள்ளது என்றும், அதற்கு சுருக்கொப்பம் செய்ய வில்லை என்றும் சொன்னால் சரிதான். புகார் வாக்கு மூலம் காலதாமதமாக பெறப்பட்டதற்கு என்ன காரணம் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் வாதியால் தாமதம் என குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான். என்ன காரணம் என்று குறிப்பாக தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி அன்பழகனிடம் மூன்றாம் எதிரி பிரகாஷ் கடன் வாங்கி இருந்தார் என்றும், அது சம்பந்தமாக இருவருக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

3. பாலாஜி குடோனில் இருந்த நூல் முறுக்கும் மிஷினின் உரிமையாளர் யார் என்று என்னுடைய விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 3ம் எதிரி பிரகாஷ் தான் மேற்படி மெஷினின் உரிமையாளர் என்றும், நான் சரிவரப் புலன் விசாரணை செய்யவில்லை என்பதால் தான் அதைப்பற்றி தெரிந்து கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி பாலாஜி குடோனுக்கு அருகில் இருந்த குடியிருப்பு வாசிகள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காலதாமதமாக

நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. முதல் தகவல் அறிக்கையில் ஆறு எதிரிகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றும், ஆவணங்களை தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியில்லை. குறிப்பாக சம்பவம் எங்கு நடைபெற்றது என்றால் பாலாஜி குடோனுக்கு உள்ளேயும் வெளியேயும் நடைபெற்றது. என்ன சம்பவம் உள்ளே நடைபெற்றது என்ன சம்பவம் வெளியே நடைபெற்றது என்று என்னுடைய விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

5. மூன்றாம் எதிரிடமிருந்து மேற்படி மெஷினை சட்டவிரோதமாக கைப்பற்றுவதற்கு சாட்சிகள் அன்பழகன், வரதராஜன், குண்டுமுத்து மற்றும் கலைமணி ஆகியோர்கள் செயல்பட்டார்கள் என்றும் அதற்கு ஆதரவாகவும் மற்றும் மேற்படி ஒன்றாம் எதிரி அஞ்சலிதேவி கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காகவும், கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்தை பெற்று சரிவரப் புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரி இல்லை. காவல் நிலைய ஆணையின்படி நான் இந்த வழக்கை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.03.02 17:06:03 -0800

Judicial Magistrate No.III,

Erode.